## COVID 19 அவசர நிலையை கையாள முறையீடு

**மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பொது மக்களின் கடிதம்**

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மா,

COVID 19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்று பொது சுகாதாரத்திற்க்கு தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலையும் அதிலும் குறிப்பாக கோடான கோடி மக்களின் வாழ்க்கைக்கும், வாழ்வாதாரத்திற்க்கும் பேரழிவை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் தினக்கூலிகள், சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாய கூலிகள், 100 நாள் வேலைக்கு செல்பவர்கள், முதியோர் ஊதியம் பெறுபவர்கள், வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், குடிசைவாசிகள், வீடற்றவர்கள் மற்றும் இதர தற்காப்பற்ற சமூகத்தினர் ஆவார்கள்.

நீங்களும் உங்கள் துறையும் பொது மக்களை இக்கொடிய தொற்றில் இருந்து காப்பாற்ற தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில், சமூக நலனில் அக்கறை கொண்டு இம்முறையீட்டை நாங்கள் உங்களுக்கு எழுதுகிறோம். நாங்கள் பலவித அரசு திட்டங்களை மக்கள் மத்தியில் செயல்படுத்திய அனுபவங்களை கொண்டு, உடனே செயல்படுத்தவேண்டிய சில ஆலோசனைகளை உங்களுக்கு வழங்க கட்டாய படுத்தப்பட்டு உள்ளோம்.

கடந்த ஆண்டுகளில் வெளிப்படைதன்மையுடன் சம்பந்தப்பட்ட வீடுகளுக்கு முன்னேற்றங்களை கொண்டுபோய் சேர்த்த பல்வேறு சமூக நல திட்டங்களான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSA), மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (MGNREGA), ஓய்வூதிய திட்டங்கள், உஜ்வலா, PM-KISAN, ஆகியவற்றின் மூலம் இத்தகைய அவசர காலங்களில் தேவையான உதவிகளை தேவையானோருக்கு அளிக்க முடியும். இது ஒருபுறம் இருக்க, நம் நாட்டில் மாநகர் மற்றும் நகர் புறங்களில் வசிக்கும் தினக்கூலிகள், கட்டிடத் தொழிலாளர்கள், நாடோடிகள், வீடற்றவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் மேற்கூறிய திட்டங்களின் பயனாளிகள் அல்லர். இவர்களுக்கும் அரசின் அனைத்து உதவிகளும், நிவாரணங்களும் கண்டிப்பாக சென்று சேர வேண்டும். அதற்காக கீழ்கண்ட உடனடி கோரிக்கைகளை நீங்கள் கருத்தில்கொண்டு செயல்படுத்துவீர்கள் என நம்புகிறோம்.

**உடனடி நடவடிக்கைகள்**

1. 3 மாதங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணை, உப்பு, மசாலா பொருட்கள் மற்றும் சோப்பு ஆகியவற்றை NFSA (AAY, PHH and NPHH) அட்டை தாரர்களுக்கு முன்கூட்டியே இலவசமாக வழங்கிட வேண்டும்.

2. உணவு தேவை படுபவர்கள் உணவருந்த , அம்மா உணவகத்தில் தினமும் இருவேளை உணவு, மே மாதம் வரை வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.
3. NSAP திட்டத்தின் கீழ் வரும் ஓய்வூதியதாதர்களுக்கு 3 மாதங்களுக்குரிய ஓய்வூதியத்தை வரும் ஏப்ரல் 1 ம் தேதி அன்று முன்கூட்டியே வழங்க வேண்டும். PMMVY மற்றும் ஜனனி சுரக்ஷா யோஜனா வின் கீழ் வரும் தாய்மார்களுக்கு அனைத்து உதவிகளையும் நிபந்தனையின்றி முன்கூட்டியே வழங்க வேண்டும்.
4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நிலுவையில் உள்ள சம்பள ராசி மற்றும் பொருட்களுக்கான ராசி ரூ. 8396 கோடியை உடனே வழங்க வேண்டும்.
5. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அனைத்து பணியாட்களுக்கும் இந்நேரத்தில் அதாவது lockdown முடியும் வரையில் ஊதியம் வழங்க வேண்டும்.
6. PM-Kisan திட்டத்தின் முதல் தவணை ராசியை உடனே தந்திட வேண்டும்
7. PMAY(பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்) மற்றும் SBM (தூய்மை இந்தியா திட்டம்) திட்டங்களில் நிலுவையில் உள்ள தவணைகளை செலுத்திட வேண்டும்.
8. மேற்கூறியவற்றுடன், வறுமையில் வாடும் மக்களுக்கு அவசரகால நிவாரண தொகையாக ரூ. 7000 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு வழங்கிட வேண்டும். இதனை செயல் படுத்த மொத்தம் ரூ. 3.75 லட்சம் கோடி செலவாகும். (இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் GDP 1.92 %). இதன் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.
9. தவிர்க்க முடியாத சூழ்நிலையில், MGNREGA பணியாளர்கள் பணியாற்றும் போது COVID 19 -ன் சிறப்பு தேவைகளான முகமூடிகள் மற்றும் சானிடைசர்கள் கட்டாயம் வழங்க வேண்டும்.
10. காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பணியாட்கள் அனைவரையும் Building and Other Construction Workers (BoCW) Act ன் கீழ் பதிவுசெய்யபப்ட்ட பணியாளர்களாக சேர்க்க வேண்டும். இதனால் பணியாட்கள் பிற்காலத்தில் சமூக பாதுகாப்பு பயன்களான காப்பீடு, ஓய்வூதியம், குழந்தைகள் படிப்பிற்கான உதவித்தொகை மற்றும் இதர பயன்களை பெற வழி வகை செய்யும்.

**<u>கொண்டுசேர்க்கும் முறை</u>**

உடனடி நிவாரணத் தொகை மற்றும் 3 மாதங்களுக்கு தேவையான பொருட்கள் ஒவ்வொரு வீட்டின் வாசற்படியில் சென்று சேர வேண்டும். ரேசன் பொருட்கள் ஒரு பெட்டியிலும், உரையிட்ட காகிதத்தில் நிவாரண தொகையும் கூடவே ஒரு பேனாவும் (இதை அவரவர்களுக்கு கொடுத்து விட வேண்டும்) சேர்த்து வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் இதன் இரண்டையும் வாங்கிய பிறகு, பேனாவினால் கையெழுத்திட வேண்டும். ஏனெனில்:

1. ஊரக வங்கிகளில் கூட்டம் கூட அதிக வாய்ப்பு உள்ளது. ஆகவே கிராம மக்களை வங்கிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தல் வேண்டும்.
2. COVID 19 தொடுதலின் மூலம் பரவுவதால், மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த பயொமெட்ரிக் கொண்டு செயல்படும் அனைத்து செயல்களையும் தவிர்க்க வேண்டும். அதாவது ரேசன் கடைகளில் PoS மெசினை பயன்படுத்தி பொருட்கள் வாங்கும்போது, வங்கி ஊழியர்கள் PoS மெசினில் இருந்து பணம் எடுக்கும் போது, வாடிக்கையாளர் சேவை மையத்தை உபயோகிக்கும் போது உள்ள அனைத்து பயொமெட்ரிக் செய்கைகளை தவிர்க்க வேண்டும்.
3. சில மாநிலங்களில் மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்படுகின்றன. கிராம பஞ்சாயத்துக்கள் இவற்றின் உதவியுடன் நிவாரண தொகையை மக்களுக்கு சென்று சேரும் படி செய்யலாம். இத்தொகையின் விவரங்களை பதிவேட்டில் பதிவிட்டு வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய ஆன்லைன்-யில் பதிவேற்றம் செய்யலாம்.
4. உடனடி நிவாரணத் தொகை மற்றும் 3 மாதங்களுக்கு தேவையான பொருட்கள், 100 வேலைக்கான சம்பள பணம், ஓய்வூதியம், PM-Kisan தவணை ராசி ஆகியவை கீழ்க்கண்ட இரு வழிகளில் மக்களுக்கு அளிக்கலாம். அ) ஒவ்வொரு வீட்டின் வாசற்படியில் சென்று சேர வைப்பது. ஆ) ரேசன் கடைகளில் வைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, ஒரே நேரத்தில் 10-க்கும் அதிகமானவர்கள் கூடதவாறு ஏற்பாடுகள் செய்து மக்களுக்கு வழங்கலாம்.

<u>**தொலை தூர நடவடிக்கைகள்**</u>

1.100நாள் வேலையை (MGNREGA) நீட்டிப்பு செய்தல் மற்றும் அதற்கான நோக்கம்

1. பெரும்பாலான மக்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையில் இடம்பெயர்ந்து அவரவர் கிராமங்களில் குடியேறி வருகின்றனர். அடுத்த 9-12 மாதங்களுக்கு அவர்களுக்கு 100 நாள் வேலை கொடுப்பது மிக அவசியம். அடுத்த நிதி ஆண்டில் 100 நாள் வேலை சமூக பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையை கருத்தில்கொண்டு 100 நாள் வேலையில் மொத்த பணிநாட்களை அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதிகரிக்க வேண்டும். இதற்கான மேற்பார்வை மற்றும் அளவீடுகளை சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும்.
2. கிராம பஞ்சாயத்தின் ஒவ்வொரு வார்டிலும் 100 நாள் வேலைக்கான களம் திறக்க வேண்டும். அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு, விரும்பினால் 100 நாட்களுக்கும் அதிகமான வேலைநாட்கள் அவர்களுக்கு வழங்க வேண்டும். கூட்டாக சேர்ந்து செய்யும் வேலைகள் அல்லாமல்,

பணியாட்கள் குறைவாக தேவைப்படும் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

3. 100 நாள் வேலை வாய்ப்பை தோட்டக்கலை வேலைகள், வன வேலைகள் மற்றும் பிற வீட்டிலிருந்து செய்யக் கூடிய வேலைகளுக்கு நீட்டிக்க வேண்டும்.

2. நகர்புறங்களில் 100 நாள் வேலை: இந்த இக்கட்டான சூழ்நிலையில் கிராமங்கள் மட்டும் அல்லாது நகர் புறங்களில் வாழும் தொழிலாளர்களும் பெரும் பாதிப்பினை அடைந்துள்ளனர். பல பேர் தங்களது சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் நகர் புறங்களில் அடைந்து கிடக்கின்றனர். இந்த நிலைமை சீரான பிறகு, நகர் புறங்களில் 100 நாள் வேலையை அறிமுகம் செய்து அவர்களுக்கு புது வாழ்வு அளிக்க வேண்டும்.

**<u>இணைப்பு</u>**

மேற்கூறிய அவசரகால நிவாரண தொகையை ஒரு முறை வழங்க மொத்தம் ரூ. 3.75 லட்சம் கோடி செலவாகும்

**கணக்கீடு**

1. இந்தியாவின் மொத்த மக்கள்தொகை 134 கோடி. சராசரியாக ஒரு குடும்பத்திற்கு நான்கு பேர் என கொண்டால் 33.50 கோடி குடும்பங்கள்.

2. 80 சதவீத குடும்பங்கள் அவசரகால நிவாரண தொகையை பெற தகுதியுடையவர்கள் என கொண்டால், 0.80*33.50 = 26.80 கோடி குடும்பங்கள். NFSA மூலம் 67 % குடும்பங்கள் பயனடைகின்றன அதாவது 23 கோடி குடும்பங்கள். ஒவ்வொருவருக்கும் ரேசன் கார்டு இல்லாததால், NFSA வின் கணக்கை எடுத்துக்கொள்வோம்.

3. ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ரூ. 7000 அவசரகால நிவாரண தொகை என கொண்டால் , ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு ரூ.14,000 ஆகும். ஆக 26.80 கோடி குடும்பங்களுக்கு ரூ. 14,000*26.80 = ரூ 3.75 லட்சம் கோடி செலவாகும்.

**மேலும் தொடர்பு கொள்ள அனுகவும்:**

அமித் போஸ்லே Amit Basole (9619649948), அனிந்திதா அதிகாரி Anindita Adhikari (9871832323),தேப்மால்யா நந்தி Debmalya Nandi (7294184845), ராஜேந்திரன்

நாராயணன்Rajendran Narayanan (962031842), ரக்ஷிதா சுவாமி Rakshita Swamy (9818838588)